# British Tamils Forum
## United Kingdom

வியாழன் 13 ஆகஸ்ட் 2015

**FOR IMMEDIATE RELEASE**

### பிரித்தானிய தமிழர் பேரவையின் தூதுவராக லீ ஸ்காட் (Lee Scott) நியமனம்

இலங்கையில் தமிழர்கள் கடந்த 60 வருடங்களாக இழந்து விட்ட தமது தேசத்தை மீண்டும் கட்டி எழுப்புவதற்காக பல தளங்களில் போராடி வருகின்றனர். பல நூற்றாண்டு காலமாக இரு தேசங்கள் இரு இனங்கள் என வாழ்ந்த தமிழர்களும் சிங்களவர்களும் 1948 ம் ஆண்டு சுதந்திரத்தின் பின்பு ஒரு நாடாக இணைக்கப்பட்டனர். அன்றிலிருந்து தமிழர்களின் அனைத்து உரிமைகளும் பெரும்பான்மையான சிங்களவர்களினால் பறிக்கப்பட்டு தமிழர்களை தமது தேசத்திலே இரண்டாம் பிரஜைகளாக மாற்றுவதற்கான முழு வேலைத்திட்டங்களையும் சிங்கள அரசு ஆரம்பித்ததிலிருந்து இழந்துவிட்ட தமது உரிமைகளையும் தேசத்தையும் மீள கட்டி எழுப்புவதற்காக தமிழர்கள் கடந்த 60 வருடங்களாக பல வழிகளிலும் போராடி வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக பிரித்தானிய தமிழர் பேரவை வன்முறைகளற்ற ஜனநாயக வழியில் இழந்துவிட்ட தமது தாயகத்தை கட்டி எழுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு கட்டமாக சர்வதேச நாடுகளுடன் நல்லுறவை பேணும் முகமாகவும் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை சர்வதேசரீதியில் எடுத்துச் செல்வதற்கும் முன்னால் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினரும், முன்னால் தமிழர்களுக்கான அனைத்து பாராளுமன்ற குழுவின் தலைவரும், தொடர்ச்சியாக தமிழர்களுக்காக பல தளங்களில் குரல் கொடுத்தவருமான லீ ஸ்காட் (Lee Scott) அவர்களை பிரித்தானிய தமிழர் பேரவை வெளிநாட்டுத் தூதுவரக நியமனம் செய்துள்ளனர். கடந்த பாராளுமன்ற தேர்தலில் சிறு வித்தியாசத்தில் பாராளுமன்ற உறுப்பினர் பதவி இழந்திருந்தும் தொடர்ந்தும் தமிழர்களின் சுதந்திரத்துக்காக குரல் கொடுக்க முன்வந்திருக்கின்றமை தமிழர்கள் அனைவரும் பெருமைப்படும் ஒரு விடயமாகவே உள்ளது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு இம் முன்முயற்சி பலம் சேர்க்கும்.

**Contact: S.Sangeeth Tel:** +44 (0) 7412 435 697
**Email:** media@tamilsforum.com

**Notes to Editors:**
**British Tamils Forum** exists to harness the skills and the knowledge of the members of the forum, well-wishers and significant others including mainstream decision makers in the UK with the aim of alleviating the sufferings of the Tamils community in the Island of Sri Lanka and to further their right to self determination within a democratic frame work under pinned by international law, its covenants and conventions. For more information admin@tamilsforum.com and/or visit: www.tamilsforum.com